## நீட்: மாணவர்களின் சிதைக்கப்பட்ட கனவுகள்!

# ‘நீட்’டுக்கு எதிரான இயக்கத்திற்கு அனைவரும் ஆதரவளிப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவு!

சென்னை, செப்.23-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**‘நீட்’ என்பது தேர்வல்ல; எத்தனையோ மாணவர்களின் சிதைக்கப்பட்ட கனவுகள்! குடும்பங்களின் கண்ணீர்!**

**அதனால்தான் சமரசமின்றி, தொடக்கம் முதலே “நீட் ஒழிப்பே நிரந்தரத் தீர்வு!” என்று போராடி வருகிறோம்.**

**அந்த இலக்கோடு ‘நீட்டை ஒழிப்போம்’ இயக்கத்தை முன்னெடுத்துள்ள நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் - தமிழ்நாடு தோழர்களை இன்று சந்தித்து, அவர்களது கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு என் ஆதரவைத் தெரிவித்தேன்.**

**இது அரசியல் வேறுபாடுகளைக் கடந்த, நம் மாணவர்களின் எதிர்காலத்துக்கான போராட்டம்.**

**எனவே, கழகத் தோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த இயக்கத்திற்கு ஆதரவளித்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் புதிய புரட்சிக் கழகத்தின் தலைவர் ஓ.இ.சங்கர் பொதுச்செயலாளர் கோல்டன் கோபி ஆகியோர் தலைமையில் மாநில நிர்வாகிகளான துணைப் பொதுச் செயலாளர் தரமணி வேலு, தலைமை நிலையச் செயலாளர் மடையத்தூர் துரைசாமி, மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பி.ஹரிகிருஷ்ணன், கொள்கைப் பரப்பு செயலாளர் வழக்கறிஞர் கேட் சேகர், கமலஹாசன் செல்வமணி, உமா மகேஷ்வரன் மாநிலச் செயலாளர் அஜிஸ்ராசா, மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஜி.கே.சேகர், மாவட்ட தலைவர் வி.எம்.மாரிமுத்து, பொருளாளர் இளங்கோ, அமைப்பாளர் மணிகா ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு புதிய புரட்சிக் கழகம் முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு புதிய புரட்சிக் கழக நிர்வாகிகள், தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் எனவும் தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது பனையூர் பாபு உடனிருந்தார்.

## தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளில்


# குறைமாத குழந்தைகளுக்கான மருந்துகள் தட்டுப்பாடு!

## ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் செய்தி!

**சென்னை, செப். 23-**

**தமிழக அரசு மருத்துவமனைகளில் குறைமாதக் குழந்தைகளுக்கான அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்று ‘தி இந்து’ நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.**

**சிகிச்சை தேவைப்படும் குறைமாதக் குழந்தைகளின் நுரையீரல்களை விரிவடையச் செய்வதற்கு சர்பாக்டன்ட் மருந்துகள் அவசியமானவை. பல மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்களிடம் விசாரித்ததில், பல மையங்கள் சர்பாக்டன்ட் மருந்துகளுக்குத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருவது தெரியவந்துள்ளது, என்றும் அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.**



Govt. hospitals short on critical medicines for pre-term babies

Serena Josephine M.
CHENNAI

Government hospitals across Tamil Nadu are facing a shortage of critical and life-saving surfactant medicines for pre-term babies.

The shortage has been persisting for the past few months, and several Special Newborn Care Units (SNCUs) at government

**Surfactant medicines are essential to inflate the lungs of pre-term babies in need of the therapy**

surfactants were part of the speciality drug rate contract purchases of the Tamil Nadu Medical Services Corporation (TNMSC).

Inquiries with a number

lai, Vellore and Karur districts and in Chennai, reported surfactant shortage, while some hospitals said they had uninterrupted supply.

A doctor said the shortage prevailed in the past three to four months owing to a number of factors. “First, we got no allotment. Secondly, some centres miscalculated their requirement, which is

இது தொடர்பாக மேலும் வெளியான தகவல் வருமாறு:-

மிகவும் குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளில், நுரையீரலில் உள்ள நுண்ணிய காற்றுப் பைகளான ஆல்வியோலைகள், தாங்களாகவே திறம்படச் செயல்படும் அளவுக்குப் போதுமான முதிர்ச்சி அடையாமல் இருக்கும் நிலையில் நுரையீரலில் உற்பத்தி செய்யப்படும் சர்பாக்டன்ட் என்ற பொருள், ஆல்வியோலைகளைத் திறந்து வைக்க உதவுகிறது. ஆனால், மிகவும் குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளில், போதுமான அளவு சர்பாக்டன்ட் உற்பத்தி செய்யப்படாமல் போகலாம். மருத்துவர்கள் CPAP அல்லது இயந்திர சுவாசக்கருவி போன்ற சுவாச ஆதரவைப் பயன்படுத்தலாம். எண்டோட்ராக்கியல் குழாய் வழியாக சர்பாக்டன்ட் நேரடியாக நுரையீரலுக்குள் செலுத்தப்படுகிறது என்று ஒரு மருத்துவர் குறிப்பிடுகிறார்.

தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகள், குறைமாதக் குழந்தைகளுக்கு இன்றியமையாத மற்றும் உயிர்காக்கும் மருந்தான சர்பாக்டன்ட் மருந்துகளுக்குத் தட்டுப்பாட்டை சந்தித்து வருகின்றன.

கடந்த சில மாதங்களாக இந்தப் பற்றாக்குறை நீடித்து வருகிறது, மேலும் அரசு மருத்துவமனைகளில் உள்ள பல சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகள் (SNCUs) இதனை சுகாதாரத் துறைக்குச் சுட்டிக்காட்டி வருகின்றன.

சிகிச்சை தேவைப்படும் குறைமாதக் குழந்தைகளின் நுரையீரல்களை விரிவடையச் செய்வதற்கு சர்பாக்டன்ட் மருந்துகள் அவசியமானவை என்று மருத்துவர்கள் கூறினர். அவர்கள் குறைமாதக் குழந்தைகளுக்கு வெளிப்புற மாட்டு அல்லது பன்றி சர்பாக்டன்ட்களை (மூச்சுக்குழாயினுள்) பயன்படுத்தினர். இந்த சர்பாக்டன்ட்கள், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் (TNMSC) சிறப்பு மருந்து விலை ஒப்பந்தக் கொள்முதல்களின் ஒரு பகுதியாக இருந்தன.

பல மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்களிடம் விசாரித்ததில், கடந்த சில மாதங்களாகப் பல மையங்களில் சர்பாக்டன்ட்களின் தட்டுப்பாடு நிலவி வருவது தெரியவந்தது. தேனி, தர்மபுரி, திருப்பூர், கடலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் மற்றும் சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் சர்பாக்டன்ட் குப்பிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், தெரியவந்துள்ளன.


பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு மருத்துவர், பல காரணங்களால் கடந்த மூன்று முதல் நான்கு மாதங்களாக இந்தத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறினார். “முதலாவதாக, எங்களுக்கு ஒதுக்கீடு கிடைக்கவில்லை. இரண்டாவதாக, குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்படும் அளவை சில மையங்கள் தவறாகக் கணக்கிட்டன. மூன்றாவதாக, இதன் பயன்பாடு அதிகமாக இருந்தது. உடல் திடமாக இருக்கும் குறைமாதக் குழந்தைகளின் நுரையீரல்களை விரிவடையச் செய்வதற்கு அவசியமான, உயிர்காக்கும் மருந்து இது,” என்று அவர் கூறினார்.

மற்றொரு மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர், தொடர்ச்சியான விநியோகத்திற்கு உத்தரவாதம் இல்லை என்றும், அடிக்கடி பற்றாக்குறை ஏற்படுவதாகவும் கூறினார். “தற்போது, எங்களிடம் குழந்தைகளைப் பரிந்துரைக்கும் மற்ற துணை மையங்களிடமிருந்து நாங்கள் கடன் வாங்குகிறோம். சர்பாக்டான்ட்கள் இல்லாமல் பச்சிளங்குழந்தைகள் பிரிவுகளை நிர்வகிப்பது எங்களுக்கு மிகவும் கடினமாக உள்ளது. சில சமயங்களில், குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக, எஸ்.என்.சி.யு. நிதியைப் பயன்படுத்தி அவற்றை நாங்கள் தனியாக வாங்குகிறோம்,” என்று கூறினார்.

ஒரு மூத்த குழந்தை நல மருத்துவர் கூறுகையில், 34 வார கர்ப்ப காலத்திற்குப் பிறகு, கருவின் நுரையீரல்கள் பொதுவாகப் பிறந்த பின் ஆக்சிஜன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு பரிமாற்றத்தை ஆதரிக்கும் அளவுக்குப் போதுமான முதிர்ச்சி அடைகின்றன. “இருப்பினும், மிக முன்கூட்டியே பிறக்கும் குழந்தைகளில், நுரையீரலில் உள்ள சிறிய காற்றுப் பைகளான ஆல்வியோலைகள், தாங்களாகவே திறம்படச் செயல்படுவதற்குப் போதுமான முதிர்ச்சி அடையாமல் இருக்கலாம். நுரையீரலில் உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளான சர்பாக்டன்ட், ஆல்வியோலைகளைத் திறந்து வைக்க உதவுகிறது. ஆனால் மிக முன்கூட்டியே பிறக்கும் குழந்தைகளில், போதுமான சர்பாக்டன்ட் உற்பத்தி செய்யப்படாமல் போகலாம், இதனால் அவர்களால் போதுமான ஆக்சிஜன் அளவைப் பராமரிப்பது கடினமாகிறது. குழந்தையின் நிலையைப் பொறுத்து, மருத்துவர்கள் CPAP அல்லது இயந்திர சுவாசக்கருவி போன்ற சுவாச ஆதரவைப் பயன்படுத்தலாம். ஹைலின் சவ்வு நோயைத் தடுப்பதற்காக, சர்பாக்டன்ட் எண்டோட்ராக்கியல் குழாய் வழியாக நேரடியாக நுரையீரலுக்குள் செலுத்தப்படுகிறது.”

பிறந்த குழந்தையின் நுரையீரல் முதிர்ச்சி மிகவும் முக்கியமானது, ஏனெனில் ஆக்ஸிஜன் குறைபாடு, ஹைபோக்ஸியா மற்றும் குறைப் பிரசவ விழித்திரை நோய், ஹைபோக்ஸிக்இஸ்கெமிக் என்செபலோபதி போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்று அவர் கூறினார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




# ஒட்டன்சத்திரத்தில் திராவிடக் கருத்தியல் உரையரங்கம்!

## முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்,எல்,ஏ. சிறப்புரையாற்றினார்!

ஒட்டன்சத்திரம், செப்.23-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் திராவிடர் விழுதுகள் சார்பில் திராவிடக் கருத்தியல் உரையரங்கம் மற்றும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு திராவிட விழுதுகள் ஒருங்கிணைப்பாளர் கருப்புச்சாமி தலைமை வகித்தார். விழாவிற்கு முனைவர். சண்முகவேல், ரகுமத்துல்லா, பகதூர்ராஜா, முத்துக்குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். முனைவர் மு.மதியழகன் வரவேற்புரையாற்றினார்.

முன்னாள் அமைச்சர் அர. சக்கரபாணி. எம்.எல்.ஏ.. முன்னாள் கூட்டுறவுத்துறை பதிவாளர் செந்தமிழ்ச்செல்வன் ,ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

திராவிடக் கருத்தியல், வரலாறு மற்றும் சமூக சிந்தனைகள் தொடர்பாக உரையரங்கம் நடைபெற்றது. விழாவில் திமுக கல்வியாளர் அணி மாநில தலைவர் புலவர் செந்தலை கவுதமன், தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர் மோகன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஜெயராஜ், திராவிவிழுதுகள் அரிஸ்டாட்டில், ம.தி.மு.க. மேற்கு மாவட்ட பொறுப்பாளர் தமிழ்வேந்தன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், திராவிடதளம் தாமரைக்கண்ணன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவிற் கான ஏற்பாடுகளை திராவிடர் விழுதுகள் அமைப்பினர் செய்திருந்தனர். முடிவில் பெரியார் நம்பி நன்றி கூறினார்.

## மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல்:

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு சிறுபான்மை மக்கள் கட்சி ஆதரவு!

## நிறுவனத் தலைவர் எர்ணாவூர் எஸ்.ஜெயராஜ் அறிக்கை!

சென்னை, செப். 23-

சிறுபான்மை மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் எர்ணாவூர் எஸ். ஜெயராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சிறுபான்மை மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் எர்ணாவூர் எஸ். ஜெயராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்ற கழகம் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சிறுபான்மை மக்கள் கட்சியின் அன்பின் நல்வாழ்த்துகளும் வணக்கங்களும்...

முன்னாள் முதல்வர் பாசத் தளபதி மு.க. ஸ்டாலின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர் அவர்களுக்கு தமிழ்நாட்டில் நடைபெறவிற்கும் 2026 ஆம் ஆண்டு மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் ஒத்த கருத்துடைய ஜனநாயக சக்திகளையும், இடதுசாரி சிந்தை கொண்ட வர்களையும்,சமூக நீதி காக்கிறவர்களையும் ஒருங்கிணைந்து அறிவார்ந்த சமுதாயம் மலரவும்,பாசிச மற்றும் மதவாத சக்திகளை எதிர்க்கவும், கொள்கை அடிப்படையிலான, மத நல்லிணக்கம் மற்றும் மாநில உரிமைகளை பாதுகாக்கவும்

சட்டமன்றத்தில் தனது தனி பெரும்பான்மையை நிரூபிக்க குதிரை பேரம் நடத்தி தனக்கு வாக்கு செலுத்திய பொது மக்களை ஏமாற்றி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிய ஆளும் ரீல்ஸ் அரசு தானாக ஏற்படுத்திய இந்த இடைத்தேர்தலில் மதச்சார்ப்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு சிறுபான்மையினரின் வாக்கு வங்கியை உறுதிபடுத்தும் விதத்தில் சிறுபான்மை மக்கள் கட்சி தனது முழு ஆதரவு வழங்கி அதன் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் முழுமையாக கழகத்தின் வேட்பாளர்கள் வெற்றிக்கு உழைப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வங்கக்கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி!

*சென்னை, செப். 23-*

வங்கக்கடலில் வடக்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த 19ந் 20ந்தேதி கிழக்கு மத்திய வங்கக்கடல் மற்றும் வடக்கு அந்தமான் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்தது.

தொடர்ந்து மேற்கு வடமேற்கு திசையில் நகரும் இது இன்று இரவு முதல் நாளை அதிகாலைக்குள் விசாகப்பட்டினம் மற்றும் கோபால்பூர் இடையே வடக்கு ஆந்திரப் பிரதேசம் தெற்கு ஒடிசா கடற்கரை பகுதியை நெருங்கும்.

இது மேலும் தீவிரமடைந்து புயலாக மாறினால், இதற்கு ‘அர்னாப்’ என பெயரிடப்பட வாய்ப்புள்ளது. எனினும் இந்த அமைப்பு தற்போதைக்கு தீவிரப் புயலாக மாறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் திராவிட கருத்தியல் உரையரங்கம் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.



நடைபெற உள்ள தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக தேர்தல் பணி குறித்து கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் வார் ரூமில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், கழக துணை பொதுச்செயலாளர் வெள்ளகோவில் மு.பெ.சாமிநாதன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.